முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 220 வது நாள்

வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, செப். 28 - சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 220 வது நாள் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 220 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (27.09.2025), வில்லிவாக்கம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 96, போர்ச்சியல் ரோடு, 2) வட்டம் 98ஆ, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, வே.வாசு, கூ.பீ.ஜெயின், லதாவாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, சீ.விக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயாள், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ)உமாசங்கர், சொ.முருகேசன், ப. லோகு பாபு, கே.எஸ்.பாபு. இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

மயிலை 126 வது வார்டில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு வார்டு முழுவதும் உள்ள பவானி குப்பம், ராஜீவ் காந்தி நகர், நம்பிக்கை நகர், முளிமா நகர், லாஸரஸ் சர்ச் ரோடு, பெரிய காரக்குட்டை, பாரதி நகர், ஆண்டிமான்ய தோட்டம் ஆகிய பகுதிகள் அடங்கிய வார்டு முழுவதும் மழைக்காலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்தும் குறைகளை கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். உடன் பகுதி கழக செயலாளர் எஸ் முரள, வட்ட கழக செயலாளர் கோ. கண்ணன் , மாமன்ற உறுப்பினர் அமிர்தவர்ஷினி மற்றும் கழக நிர்வாகிகள் அனைத்து துறை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

பல்லாவரம் நகரத்தின் முன்னாள் துணைச் செயலாளர்

கழக முன்னோடி தாடி கிருஷ்ணன் மறைவு!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் அஞ்சலி

பல்லாவரம் செப்28

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதியில் வசித்த வந்த பல்லாவரம் பெருநகர திமுக வாக இருந்த காலத்தில் நகரத்தின் துணைச் செயலாளராகவும் 3வது வட்டக் கழகத்தின் செயலாளராகவும் இருந்த கழகத்தின் மூத்த முன்னோடியும் மொழிப்போர் தியாகிமான தாடி என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட கிருஷ்ணன் அவர்கள் 27-9-2025 நேற்று காலை 9 மணி அளவில் வயது முதிர்வின் காரணத்தினால் இயற்கை எய்தினார் பல்லாவரம் பகுதியில் எப்பொழுதும் கழகத்தின் வளர்ச்சிக்காக சைக்கிளில் கழக கொடி கட்டிக் கொண்டு வந்து கழகப் பணியாற்றியவர் பல்லாவரம் பகுதிக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் வருகை தரும் போது 20 அடி உயரம் கொண்ட கொடிக்கம்பத்துடன் வந்து வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்வார் அப்போது பல்லாவரம் பகுதிக்கு வரும் கலைஞர் அவர்கள் தாடி எப்படி இருக்கிறாய் என்று கேட்கும் அளவுக்கு பல்லாவரம் பகுதியில் கழக பணியாற்றி அனைவரிடத்திலும் அன்புடன் பழகக் கூடியவர் தாடி கிருஷ்ணன் அவர்களின் மறைவுச் செய்தியை கேட்டு உடனடியாக மாவட்டக் கழகத்தின் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் நேரில் வருகை தந்து மாலை அணிவித்து கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினார்.

அப்பொழுது மண்டல தலைவரும் வடக்கு பகுதி செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தெற்கு பகுதி செயலாளர் இ. எஸ். பொர்னார்ட் பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் பகுதி கழக நிர்வாகிகள் ச. சிவக்குமார் இரா. சேகர் எம். இளங்கோ மாமன்ற உறுப்பினர்கள் டி.வி.ராஜா எஸ். நெடுஞ்செழியன் வட்டக் கழக செயலாளர்கள் பி. பரமசிவம் பி. ராஜ்குமார் எம். அந்தோணி டி. எச். பிரான்சிஸ் பால் கோ. ரங்கநாதன் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர். கௌதம் ஜி. சீனிவாசன் வட்டக் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள் அன்னாரின் திருஉடல் பழைய பல்லாவரம் மலகானந்தபுரம் அண்ணா தெருவில் உள்ள அன்னாரின் மகள் இல்லத்தின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது 28 9 2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் அன்னார் இல்லத்திலிருந்து இறுதி ஊர்வலம் புறப்பட்டு மலகானந்தபுரம்இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட உள்ளது

புழல் எம். நாராயணன் முன்னிலையில் பொன்னேரி சட்டமன்றத் தொகுதி

மாதவரம் வடக்கு 15வது வட்டம் மணலி புதுநகரில் சாலை மேம்பாடு வளர்ச்சிப் பணிகள்

துரை. சந்திரசேகர் எம்.எல்.ஏ.ஆய்வு. – கே.அங்குசாமி பங்கேற்பு

சென்னை, செப். 28 - சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, 15வது வட்டம் மணலி புது நகரில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் நடைபெற்று வரும் சாலை மற்றும் வளர்ச்சி பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

15வது வட்டம் மணலி புதுநகர் பகுதியில் உள்ள 34 வது பிளாக்கில் உள்ள மூன்றாவது பிரதான சாலையில் மழை நீர் மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட்டதன் விளைவாக சாலையில் ஏற்பட்டுள்ள மேடு பள்ளங்களை சரி செய்யும் பணி மண்டலம் 2 மணலி மண்டல அலுவலர் தேவேந்திரன் அவர்களின் மேற்பார்வையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வடகிழக்கு பருவமழை எதிர்நோக்கியுள்ள இக்கால கட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ,கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகர் பார்வையிட்டு பணிகளை ஆய்வு செய்து துரிதப்படுத்தினார். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 மணலி மண்டல அலுவலர் தேவேந்திரன் மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் பொறியாளர்கள் மாநகராட்சி ஊழியர்கள் ஆகியோர் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து விளக்கினார்கள்.

மணலி புதுநகர் பால்பூத்த ருகே 2012 ஆம் ஆண்டு அசோக் லேலண்ட் நிறுவனத்தின் மூலம் கட்டப்பட்ட சமுதாயக்கூடம் தற்பொழுது பயன்பாட்டில் இல்லாமல் பழுதடைந்து உள்ளது. கட்டிடமானது தற்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி பெருநகர சென்மாநகராட்சியின் மூலதன நிதி ரூபாய் 7.50 கோடி செலவில் புதுப்பிக்கப்பட உள்ளது. இந்த சமுதாய கூட்டத்தையும் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மணலி புதுநகர் பிரதான சாலையில் அமைக்கப்பட்டு வருகின்ற பேருந்து நிழற்குடை மற்றும் மரம் நடும் பணிகளையும் பார்வையிட்டு துரிதப்படுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் வட்ட செயலாளர் கே.அங்குசாமி, மாவட்ட பிரதிநிதி கே. செல்வன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபாலகிருஷ்ணன், வட்டக் கழக நிர்வாகிகள் பி.டி. ரவிச்சந்திரன், எல்லமுத்து, பாலாஜி, கண்ணன், ராஜேந்திரன், பைஜிமான், வழக்கறிஞர் டில்லி, மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி, சிவப்பிரகாஷ், எசுராஜ், ரஞ்சித் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

சைதை மேற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் பகுதி அமைப்பாளர் ஜிம் க.பிரபு தலைமையிலும், பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., முன்னிலையில், இளைஞர் அணியின் வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள், அறிமுக ஆலோசனைக்கூட்டத்தில் தலைமைகழக செய்தி தொடர்பு துணை செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., ஆலோசனை வழங்கினர். இரா.துரைராஜ் எம்.சி., மா.அன்பரசன், களக்காடிஎல்லப்பன், மின்னல் கந்தப்பன், ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், மாவட்ட பிரதிநிதி டி.என்.சிவமணி, பகுதி துணை செயலாளர்கள் ஆர்.ரமேஷ், வட்ட செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன், கொடி பாலா, ம.சுகுமார், க.தீபன், இரா.வெங்கடேசன், எம். அருண், எஸ்.பரத்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் கிழக்கு பகுதி 11 வது வார்டில் நடந்த "உங்களுடன் ஸ்டாலின் "முகாமில் கழகத் தோழர்களுடன் இணைந்து தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன் பயனாளிகளுக்குத் தேவையான உதவிகளை செய்தார்.

தமிழ்நாடு அனைத்து அமைப்புசாரா தொ.மு.ச. நிர்வாகிகள்

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அனைத்து அமைப்புசாரா தொ.மு.ச. (பதிவு எண். 3284/CNI, பேரவை இணைப்பு எண். 1000) நிர்வாகிகள் கூட்டம் 28.08.2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்படி தமிழ்நாடு அனைத்து அமைப்பு சாரா தொ.மு.ச.நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்.

சங்க நிர்வாகிகள்

மாநிலத் தலைவர் – ராஜா குப்புசாமி

துணைத் தலைவர்கள் – 1) நா.மலைக்கண்ணு (இராமநாதபுரம்). 2) செ.தங்கமுத்து (ஈரோடு). 3) எஸ்.தமிழ்செல்வி (நாமக்கல்). **பொதுச்செயலாளர்** – இரா.பொன்னுராம்

துணைப் பொதுச்செயலாளர்கள் 1) வி.மோகன் (கிருஷ்ணகிரி). 2) வி.எஸ்.மோகன் (தஞ்சாவூர்). 3) க.பிரபாகரன் (கோவை). **பொருளாளர்** – ஜெ.பழனி

இணைச் செயலாளர்கள் : 1) லெட்சுமி நாராயணன் (தர்மபுரி). 2) ஆர்.ரெங்கசாமி (திருப்பூர்). 3) தமிழ்ச்செல்வி ஆனந்தன் (திருச்சி). 4) பீட்டர் ரூபன்ஸ் (பொள்ளாச்சி)

அமைப்புச் செயலாளர்கள் – 1)த.சுமதி (சென்னை). 2) சர்புதீன் (நெல்லை) பிரச்சாரச் செயலாளர்கள் 1) சி.டிசி. துரைசாமி (கோவை). 2) அந்தோணிராஜ் (திருப்பூர்). 3) ஜெ.சுரேஷ்பாபு (சென்னை) 4)ஏ.ஏஆறுமுகம். (திருவண்ணாமலை)

வட்டாரச் செயலாளர்கள்: 1) சி.பாஸ்டின் அந்தோணிராஜ் (தஞ்சாவூர்). 2) எஸ்.உண்ணாமலை (அரூர்). 3) கே.சுதா (திருவள்ளூர்). 4) எம்.ஏ.ராமர் – மதுரை. 5) வெ.கலைநேசன் (வேலூர்). 6) யசோதா (கிருஷ்ணகிரி). 7) ஜாஸ்மின் (நீலகிரி). 8) பெப்சி கண்ணன் (செங்கல்பட்டு).

மு.சண்முகம், Ex.MP)
பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை

தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அனைத்து மாநகராட்சிகள் பொதுஊழியர்கள் முன்னேற்றச் சங்க (பதிவு எண். 3410/TRI, பேரவை இணைப்பு எண். 629) த்தின் மாநிலத் தலைவராகப் பொறுப்பு வகித்து வந்த திரு. வே.பாபுமாணிக்கராஜ் அவர்கள் மறைவெய்தியதையொட்டி, மாநிலத் தலைவர் பதவியில் ஏற்பட்ட காலியிடத்திற்கு சங்கத்தின் சட்டவிதிகளின்படி நிர்வாகக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, திரு. G.மணிவேலன் அச்சங்கத்தின் மாநிலத் தலைவராக நியமனம் செய்யப்படுகிறார் ஏற்கெனவே பொறுப்பிலுள்ள நிர்வாகிகள் இணைந்து பணியாற்றிட கேட்டுக் கொள்ளப்படு கிறது.

மு.சண்முகம், Ex.MP)
பொதுச்செயலாளர், தொ.மு.ச. பேரவை

பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, மாதவரம் வடக்கு 15 வது வட்டம் மணலி புதுநகரில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் 15வது வட்டச் செயலாளர் கே. அங்குசாமி ஆகியோர் முன்னிலையில் துரை. சந்திரசேகர் எம் எல் ஏ ஆய்வு செய்து, பார்வையிட்டு துரிதப்படுத்தினார். மண்டல அலுவலர் தேவேந்திரன் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

சென்னை தெற்கு மாவட்டம், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு வேளச்சேரி மேற்கு பகுதி துணை அமைப்பாளர் சேவா ரத்னா எஸ்.நஜிம் ஆதம்பாக்கம் லக்கி மஹாலில் நடைபெற்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சென்னை தெற்கு மாவட்ட துணை செயலாளர் க.சதிஷ் மலர்விழி (175வது வட்ட மகளிர் அணி செயலாளர் விசிக) அவர்களின் தங்கை க.தினேஷ் தி.சுகன்யா ஆகியோரின் இல்ல விழாவில் கலந்து கொண்டு வாழ்த்தினார். விழாவில் 175வது வட்ட பகுதி பிரதிநிதி உ.சிவா,யாஸ்மின் சதிஷ்,வேளச்சேரி சிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.